අධ්‍යාපන, විද්‍යා හා තාක්ෂණ අමාත්‍යාංශය
கல்வி, விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அமைச்சு
Ministry of Education, Science and Technology

'ඉසුරුපාය', බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව.
'இசுருபாய', பத்தரமுல்ல, இலங்கை.
'Isurupaya', Battaramulla, Sri Lanka.
+94112785141-50 +94112785818
info@moe.gov.lk www.moe.gov.lk

මගේ යොමුව / எனது இல. / My Ref.

ඔබේ යොමුව / உமது இல. / Your Ref.

දිනය / திகதி / Date 2024/09/29

## தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை - 2024 தொடர்பில் எழுந்த பிரச்சனைக்கான தீர்வு

2024 செப்ரெம்பர் 15 ஆம் திகதி இடம்பெற்ற தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையின் வினாப்பத்திரத்தில் உள்ளடக்கப்பட்ட வினாக்கள் பரீட்சைக்கு முன்னர் கலந்துரையாடப்பட்டுள்ளன என முன்வைக்கப்பட்ட முறைப்பாடு தொடர்பில் பரீட்சைத் திணைக்களம் உடனடியாக விசாரணைகளை ஆரம்பித்தது. அவ்விசாரணைகளினூடாக வினாப்பத்திரம் I க்குரிய மூன்று வினாக்களுக்கு சமமான வினாக்கள் உள்ளடங்கிய பத்திரமொன்று பரீட்சைக்கு முன்னர் கலந்துரையாடப்பட்டதாகவும், அது முதல் தினம் சமூக ஊடகங்களினூடாகப் பரப்பப்பட்டதாகவும் கண்டறியப்பட்டது. அதன்படி, பரீட்சைத் திணைக்களம் இவ் ஆரம்ப விசாரணை அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு குற்றவியல் விசாரணைத் திணைக்களத்திற்கு முறைப்பாட்டை மேற்கொண்டதுடன், குற்றவியல் விசாரணைத் திணைக்களத்தினால் அவர்களது விசாரணைகளை உள்ளடக்கிய அறிக்கையானது கல்வி அமைச்சின் செயலாளருக்கு ஒப்படைக்கப்பட்டது. அவ் அறிக்கையினூடாக சமூக ஊடகங்களுக்கூடாகப் பரப்பப்பட்ட பத்திரம் பரீட்சைக்கு முன்னர் கலந்துரையாடப்பட்டிருப்பதும், பரீட்சையின் வினாப்பத்திரம் I இன் மூன்று வினாக்கள் பரீட்சைக்கு முன்னர் வெளிவந்திருப்பதும் உறுதிப்படுத்தப்படுகின்றது. இது தொடர்பில் கிடைக்கப்பெற்ற ஏனைய முறைப்பாடுகளும் விசாரிக்கப்பட்டபோதும், இதற்கு மேலதிகமாக வினாக்கள் வெளிவந்தமை உறுதிப்படுத்தப்படவில்லை.

கல்விக்குப் பொறுப்பான கௌரவ அமைச்சரின் அறிவுறுத்தலின்படி இப்பிரச்சினை, இப்பிரச்சினைக்கு வழங்கக்கூடிய தீர்வு நடவடிக்கைகள் என்பன தொடர்பான பகுப்பாய்வு அறிக்கையொன்று பரீட்சைத் திணைக்களத்தினால் கல்விச் செயலாளர் ஊடாக கௌரவ அமைச்சருக்கு முன்வைக்கப்பட்டது. அவ் அறிக்கையை பரிசீலித்து, மேற்கொள்ளக்கூடிய மிகப் பொருத்தமான நடவடிக்கையைப் பரிந்துரைப்பதற்காக உள்நாட்டு, வெளிநாட்டு நிபுணர்களைக் கொண்ட குழுவொன்று கௌரவ அமைச்சரால் நியமிக்கப்பட்டது. அக்குழுவில் கல்வியியலாளர்கள், கல்வி உளவியலாளர்கள், வைத்திய நிபுணர்கள், புள்ளிவிபரவியல் நிபுணர்கள் ஆகியோர் உள்ளடக்கப்பட்டிருந்தனர்.

பரீட்சையை மீள நடாத்துவது 10 வயதேயான பிள்ளைகளின் மனநிலையில் பாரிய பாதிப்பையும், நெருக்கடியையும் ஏற்படுத்துமென்பதாலும், அனைத்துப் பிள்ளைகளுக்கும் நியாயமான தீர்வு வழங்கப்பட வேண்டியது அவசியமென்பதாலும் மிகப் பொருத்தமான மாற்றீடாக பரீட்சைக்கு முன்னர் கலந்துரையாடப்பட்டதாக இனங்காணப்பட்ட மூன்று வினாக்களுக்கு, பரீட்சைக்குத் தோற்றிய அனைத்து மாணவர்களுக்கும் புள்ளிகளை வழங்குவது பொருத்தமானது என அந்நிபுணர் குழுவினால் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

மேலும் பரீட்சையை மீண்டும் நடாத்துதல் ஆசிரியர்களுக்கும், பெற்றோருக்கும், பாடசாலைச் சூழலுக்கும் பாரிய நெருக்கடியை ஏற்படுத்தும் எனவும் இக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

அதன்படி, அப்பரிந்துரைகளுக்கு அமைவாக நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்பதை இத்தால் அறியத்தருகிறோம். அதேபோல வினாத்தாள் மதிப்பீட்டுப் பணிகளை விரைவாக ஆரம்பித்து தாமதமின்றிப் பெறுபேறுகளை வெளியிடுவதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் அறியத்தருகிறோம்.

Jayasundara

ஜே. எம். திலகா ஜயசுந்தர
செயலாளர்,
கல்வி, விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அமைச்சு

எச். ஜே. எம். சீ. அமித் ஜயசுந்தர
பரீட்சை ஆணையாளர் நாயகம்